ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# இசைக்கலையும் பண்பாடும்

**முனைவர் ந.மு.கவிதா**

**உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை**

**வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு - 638 012**

**மின்னஞ்சல் -smpkavitha@gmail.com**

52

**ஆய்வு நோக்கம்:**

இசையின் மகிமையையும் அதன் பண்பாட்டு கலாசாரங்களையும் அறிதல்

**ஆய்வுச்சுருக்கம் :**

முத்தமிழ் என்று வழங்கப்படும் தமிழில் இசை தனக்கென ஒரு இடத்தினைப் பெற்றுள்ளது.சங்க இலக்கியம் தொடங்கி இன்று வரை இசை குறித்த தொடர் சிந்தனை தமிழர்களுக்கு உண்டு. ஓரறிவு உயிர் வரை ஆறறிவு உயிர் வரை இசைக்குக் கட்டுபாடாத உயிரினங்களே இல்லை எனலாம். இசைக்குத் தாயிடம் நாட்டுப்புறமே. நாட்டுப்புறத்தில் பயன்படுத்திய பல்வேறு இசைக் கருவிகளையும் அதனைப் பயன்படுத்திய விதமும் அறிதல்

திறவுச் சொற்கள் - இசைப்பாடல்கள் - துளைக்கருவிகள் - கஞ்சக்கருவிகள் - மிடற்றுக் கருவிகள் - கும்மியாட்டம் - முழவு – தோற்பானை - ஜிம்பலாக்கொட்டு – வாய்பாட்டு

இசை என்பது இனிய கலை. மனிதர் மட்டுமின்றி அஃறிணை உயிர்களும் இசைக்குக் கட்டுப்படும். இசையைக் கேட்டால் கோழி அதிக முட்டையிடும், பசு அதிகமான பாலைத் தரும். இசைக்குக் கட்டுபடாதவன் எத்தகைய கொடுஞ் செயலையும் செய்யக்கூடியவன் என்று ஷேக்ஸ்பியர் தெரிவித்திருக்கிறார்.

இசைக்கு இனிமை, புகழ், பாட்டு, என்ற பொருளை பெயர்ச் சொல்லாக இருக்கும்போதும், இணங்கு, உடன்பாடு என்ற பொருளை வினைச்சொல்லாக இருக்கும்போது தருகிறது. இசையைக் கேட்கும் எவரும் அதன் இனிமையில் மயக்குவார்கள், உடன்படுவார்கள் என்பதால் முதனிலை தொழிற்பெயராகிய இசை காரணப் பெயராகிறது. தமிழர் வாழ்வில் இசை பெரும் பங்குள்ளது. குழந்தைப் பருவத்தில் தாலாட்டு, விளையாட்டுப் பருவத்தில் காக்கை, நிலா பற்றிய பாடல், உடற்பயிற்சி நிலையில் கைவீசச் சொல்லிப் பாட்டு, திருமணத்தின் போது நலுங்குப் பாட்டு, இறைவனை வணங்கும் போது பக்திப் பாட்டு, கதை கேட்கும் நிலையில் நாட்டுப்புறக் கதைப் பாடல், வசதியும் ஓய்வும் கொண்டோருக்கு மேடை இசைப்பாடல்கள், இறப்பின் போது ஒப்பாரிப் பாட்டு என்று தமிழரின் வாழ்வில் எல்லா நிலைகளிலும் இசை இடம் பெற்றுள்ளது.

ஒரு மலை முகட்டிலிருந்து மற்றொரு மலை முகட்டில் வாழும் தம் சகாக்களுக்குத் தேவையான தகவல் கொடுப்பதற்காகவும், ஓய்வு நேரங்களில் மகிழ்ச்சியாக இருப்பதற்காகவும், தம் வேட்டைத் தொழிலின் போது விலங்குகளை ஓட்டி உணவு தயாரித்துக் கொள்வதற்காகவும் இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. தோலிசைக் கருவிகள், துளையிசைக் கருவிகள், கஞ்சக்கருவிகள், நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி எனப் பலவகைக் கருவிகள் நாட்டுப்புற மக்களிடம் உபயோகத்திலிருந்தன.

நாட்டுப்புற மக்கள் பயன்படுத்திய முதல் இசைக்கருவி அவர்களுடைய வாய். வாயினால் எழுப்பப்படும் ஒரு வகை ஒலி குலவை ஒலி என்று பெயர் பெறும். குலவையின் ஓசை ஊதுவது போல்

இருக்கும். வயலில் நாற்று நடும் போதும், மகிழ்ச்சியான சூழ்நிலையிலும் தங்கள் வாய்களால் எழுப்பும் ஓசை குலவை போடுதல். நாற்று நடும் போது வரம்பில் பெரியவர்கள் வரும்போது குலவையிடுவது ஒரு மரியாதை. அதற்குப் பிரதிபலனாக அவர்கள் வெற்றிலை பாக்கு வாங்க அவர்களுக்குப் பணமுடிப்பினைத் தருவது அவர்களுக்கு மரியாதை. திருமணங்களில் மாப்பிள்ளையை கிராமப் பெண்கள் வரவேற்கும் சடங்கின் போதும் குலவையிடுதல் மரபு.

தாளம் ஆட்டத்திற்கும், பாட்டிற்கும் அடிப்படையாகும். தாளம் தரும் இசைக்கருவிகள் பல. கும்மி ஆட்டத்தில் பெண்களின் கைக்கொட்டுதலே தாளமாக அமையும். பலர் சேர்ந்து எதுகை, மோனை நிரம்பிய இசைப்பாடல்களுடன் ஆடுவர். பாட்டின் இசை, கைகள் கூடுவதால் உண்டான ஓசை ஆகியவற்றால் காதுக்கும், ஆடுகின்ற பாணியும் கூடி நடந்து செல்லும் பாங்கும் கண்களுக்கு, கலை விருந்தாக அமையும் கும்மி நடனத்துக்கு ஏற்றவாறு கைகொட்டியும் பாட்டுப்பாடியும் நடனமாடுவது கொம்மாய் எனப்பெறும். இச் சொல் விருந்தே கும்மி என்னும் சொல் ஏற்பட்டது.

கையினால் தாளமிட்டு ஆடிய முறையிலிருந்து மாறுபட்டு காலினில் சலங்கை கட்டி ஆடும் முறை வந்தது. அதனை ஒயில் கும்மி என்று அழைத்தனர். ஆடவர்களும் இதில் பங்கேற்றனர். கால்களில் சலங்கையைக் கட்டிக் கொண்டு புராணக்கதைகளைச் சொல்லிவாறு கால் சலங்கையை ஒலியின் ஒசைக்கேற்றவாறு நடனமாடுகள். இங்கு சலங்கை இசைக்கருவியாக செயல்படுகிறது.

அடுத்தபடியாக கையில் கோல் கொண்டு நடனமிட்டார்கள். அந்த நடனத்திற்கு கோலே இசைக்கருவியாகப் பயன்பட்டது. பெண்கள் சுற்றிச் சுற்றி வந்து, மாறிமாறி வேறுஒருவர் கைகளிலுள்ள குச்சிகளுடன் கோலாட்டம் ஆடுவது காண்பதற்கும், அவற்றிலிருந்து பிறக்கும் ஓசைகள் கேட்பதற்கும் இன்பம் பயக்கும்.

**மூங்கில்:**

தமிழ் நாட்டு இசையும் நடனமும் கோவில்களில் தோன்றி வளர்ந்தன. கோவில்களில் தேவாரப் பாடல்களை ஓதுவதற்காக ஓதுவார்கள், ஸ்தானிகர், கட்டளையர் என்ற மூவகை இசைவாணர்கள் சாரங்கி என்னும் இசைக்கருவி முழங்க பக்திகளைப் பாடல்களைப் பாடினார்கள். சாரங்கியை,

பாணன், பறையன், துடியன், கடம்பன்
இந்நான்கும் அல்லது குடிகள் இல்லை

என்கிறது புறநானூறு. எலும்பில் துளையிட்டு அதை இசைக்கருவியாக பயன்படுத்தினர் மேலை நாட்டுப் பழங்குடி மக்கள். ஆனால் ஆதித்தமிழன் அன்னை இயற்கையிடம் பாடம் பயின்று குழலை முதல் இசைக் கருவியாக உருவாக்கினான். மூங்கிலில் வண்டு துளையிட்டு அவற்றில் நுழைத்து சென்ற காற்று இன்னொலி தந்தது கண்டு 'ஆடமைக் குயின்ற அயிர்துளை மருங்கின் கோடை அவ்வளி குழலிசையாக" என்று அகநானூறு இயற்கையின் ரகசியத்தினை இயம்ப, ஆதி மனிதன் நெருப்பால் மூங்கிலில் துளையிட்டுக் குழல் என்ற இசைக் கருவியை உருவாக்கினான் என்பதை, 'செந்தீ தொட்ட கருந்துளைக் குழல்' என்று பெரும்பாணாற்றுப்படை நிரூபனம் செய்கிறது. அதனால் தான் வள்ளுவர் குழலினிது யாழினிது என்று குழலுக்கு முக்கியத்துவம் தருகிறார்.

நாட்டுப்புற மக்கள் மூங்கிலையடுத்து பல்வேறு பொருள்களைக் கொண்டு குழல் என்ற கருவி உருவாக்கினார்கள். சந்தனக்குழல், கருங்காலிக்குழல், செங்காலிக்குழல், கொன்றைக்குழல், ஆம்பல்

குழல், முல்லைக்குழல் முதலியவைத் தோன்றின என்பதை கொங்கையந்தீங்குழல், ஆம்பலந்தீங்குழல், முல்லையந்தீங்குழல் ஆகியவை பற்றிச் சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவைப் பாடல்கள் கூறுகின்றன.

**முழவு:**

குழலுக்குப் பின் தோன்றியது முழவு. மனிதன் வேட்டையாடி விலங்குகளைக் கொன்று அதன் தோலினை உரித்து மரத்தின் மேல் உலர்த்தினான். உலர்ந்து கொட்டிப்பட்ட அந்த தோலின் மேல் காற்றால் அசைக்கப்பட்ட மரக்கிளை மோதியவுடன் ஒலி உண்டானதைக் கண்ட தமிழன் தோலைக் கொண்டு முழவு, முரசு, உடுக்கை முதலிய தோல் கருவிகளைத் தயாரித்தான்.

**தோற்பானை:**

தோற்பானைத் தாகக் கருவியினைத் தோல்பானை என்றும் நாட்டுப்புறங்களில் கூறுவார்கள். மண்ணால் செய்யப்பட்ட பானையின் வாய்ப்பகுதியில் பதப்படுத்தப்பட்;ட ஆட்டுத்தோல் அல்லது மாட்டுத்தோல் ஒட்ப்பட்டிருக்கும். பானையோடு தோல் இழுத்துக் கட்டாமல் ஒட்டப்பட்டிருப்பதால் அடிக்கடி தோற்பகுதியைச் சூடுபடுத்திக் கொண்டு இயக்குவார்கள். வலது கையில் குச்சி கொண்டு தோல்பகுதியிலும், இடது கையில் சிறுகல் கொண்டு பானையின் பக்கவாட்டிலும் முறையே இயக்குவார்கள்.

**ஜிம்பலாக்கொட்டு:**

தவில் இசைக்கருவி போல வடிவம் கொண்டதாக அமையும். ஆட்டுத்தோல், மாட்டுத்தோல் ஆகியவற்றிலிருந்து தோல்பகுதி தயாரிக்கப்படுகிறது. தவிலுக்குப் பயன்படும் வளையம், தொப்பி என்று சொல்லக்கூடிய சொற்கள் ஜிம்பலாக்கொட்டுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

உள்ளீடற்ற மரக்கூட்டின் இருபகுதிகளிலும் முறையே வளையமும், வளையத்தில் பிணைத்தவாறு தொப்பியும் அமையும். தொப்பிகளின் ஓரத்தில் பதினொரு கண்கள் போன்ற துவாரங்களும், தோல் வாரால் இழுத்துக்கட்டப்பட்டு மொய்க்கச் செய்வர். நாட்டுப்புற மக்கள் முதல் இழுப்புக்கு மழுங்கச்செய்தல் என்று கூறுவார்கள். இரண்டு பகுதிகளிலும் உருண்டையான குச்சிகள் கொண்டு ஜிம்பலாக்கொட்டு இயக்கப்படும்.

**தவில்:**

ஜிம்பலா கட்டின் அடுத்தபடியாக அமைவது தவில். இது நையாண்டி மேளத்தோடு சேர்ந்து இசைக்கப்படும்.

**பறை**:

தமிழகத்தில் பன்னெடுங்காலமாய் இருந்து வரும் நாட்டுப்புற இசைக்கருவி பறை. தப்பு என்றும் அழைப்பார்கள். தோல் இசைக்கருவி. தகவல் தொடர்பு சாதனமாக இருந்தது. பறையடித்துத் தகவல் சொல்லுதல் பழங்காலத்தில் ஒரு முக்கிய தொழிலாகப் பறையர் குடிக்கு இருந்தது. பறை என்றே சொல்லே இசைக்கருவியையும், செய்தி அறிவிக்கும் முறையும் குறித்தது தோற்கருவிகளின் பொதுப் பெயராகப் பறை என்பது வழங்கப்பட்டுள்ளது.

பறை என்ற சொல்லுக்குக் கூறு, சொல் என்ற பொருள்படும். இவற்றை மாற்றி, மாற்றி அடிப்பதன் மூலம் புதிய மெட்டுக்கள், சொற்கட்டுக்கள், உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சிகளுக்கும்

தனித்தனி அடியென வைத்திருக்கிறார்கள் சப்பரத்தடி, டப்பா அடி, பாடல் அடி, சினிமா அடி, ஜாய்ண்ட் அடி, மருள் அடி, சாமி சாட்டுதல், மாரடித்தல், வாழ்த்து அடி என ஒவ்வொரு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்ப தாளங்கள் மாறும் இசைக்கப்படும் கருவி மாறாது.

**பறையின் அமைப்பு:**

தப்பு கருவி மரக்கட்டையால் செய்யப்பட்ட வட்டவடிவமான சட்டகத்தில் புளியங்கொட்டையிலிருந்து தயாரிக்கப்பட்ட பசையினைக் கொண்டு பதப்படுத்தப்பட்ட மாட்டுத்தோலை இழுத்து ஓட்டி ஆக்கப்பட்டது. வட்டச்சட்டம், மாட்டுத்தோல், சட்டத்தின் உட்புறத்தில் பொருத்தப்படும் உலோகத்தட்டு என்ற மூன்று பாகங்களைக் கொண்டிருக்கும் 3.5 செ.மீ விட்டம் கொண்ட வட்டச்சட்டத்தில் தோல் இழுத்துக் கட்டப்பட்டு ஒட்டப்பட்டிருக்கும். சட்டம் வேப்ப மரத்தினாலானது. தப்புக் கருவியை இசைக்க இரு குச்சிகள் பயன்படுத்தப்படுகின்றன. இடது கை பயன்படுத்தம் குச்சி ஒன்றே கால் அடி நீளமும் ஒரு செ.மீ அகலமும் கொண்டு மூங்கிலால் செய்யப்பட்டது. இதனைச் சிம்புக்குச்சி அல்லது சுண்டுக்குச்சி என்று அழைப்பார்கள். வலது கை பயன்படுத்தும் குச்சி அரை அடி நீளமும், மூன்று செ.மீ சுற்றளவும் கொண்ட பூவரசங்கம்பில் செதுக்கப்பட்டிருக்கும். இதனை அடிக்குச்சி அல்லது உருட்டுக்குச்சி என்று அழைப்பார்கள்.

சிம்புக்குச்சி நீண்ட தட்டையாகவும், அடிக்குச்சி குட்டையாக பருத்ததாகவும் அமைந்திருக்கும். கட்டைவிரல் மற்ற விரல்களுக்கு இடையில் கட்டைக்குச்சியைப் பிடித்துக் கொண்டு கீழ்புறத்திலிருந்து அடிப்பார்கள். இடதுகையில் வைத்துள்ள சிம்புக்குச்சியால் தப்பின் மத்தியில் அடிப்பது ஒரு வகை அடி.

1. வலது கையில் வைத்திருக்கும் குட்டைக்குச்சியால் பறையின் மத்தியில் அடிப்பது
2. பறையைப் பிடித்துள்ள இடது கையில் வைத்துள்ள நீண்ட குச்சியால் அடிப்பது
3. இரண்டு குச்சிகளாலும் அடுத்தடுத்து அடிப்பது.

இந்த அடிப்படைகளை மனதில் பதித்து மாற்றி மாற்றி அடித்து புதிய ஓசைகளை நயம்பட அடிப்பார்கள். இதற்கான சொற்கட்டு

- டன்டனக்கு டனக்குனக்கு
- டன் டன் டன்டன் டனக்கு
- ரக்கட்ட ரக்கட்ட ரக்கட்ட
- ரண்டக்க ரண்டக்க ரண்டக்க

அடிப்பவர் தனது கற்பனைக்கேற்ப புதிய இசையினை உருவாக்கலாம்.

மாட்டுத்தோலினால் செய்யப்படுவதால் தோலிலுள்ள ஈரப்பதத்தினை அகற்றி, தோலை இறுகச் செய்ய பறையினைத் தீயில் காட்டுவார்கள். அதனால் தோல் உறுதியாகி, அடிக்கும்போது உயர் சுருதியில் நல்ல ஓசையை எழுப்பும். திருவிழாக் காலங்களில் பறையைக் கொண்டு ஆடும் ஆட்டத்திற்குப் பறையாட்டம் என்று அழைத்தார்கள்

**பறையின் வகைகள்:**

பறையின் இசையும், வடிவமும் நுணுக்கமாக வேறுபடுகிறது.

- அரிப்பறை: அரித்தெழும் ஓசையையுடைய பறை
- ஆறெறிப்பறை: வழிப்பறி செய்வோர் கொட்டும் பறை

- உவகைப்பறை: மகிழ்ச்சியைக் குறிக்கும் பறை
- சாப்பறை: சாவில் அடிக்கப்படும் பறை
- சாக்காட்டுப்பறை: இறுதிச் சடங்கின் போது இசைக்கும் பறை
- வெட்டியான் பறை: சில விசேஷ காலங்களில் கொட்டும் பறை
- கல்லவடம் : ஒரு வகைப்பறை
- கொடுகொட்டி
- நிசாளம்
- சூசிகம் - தகுதியெனக் கூறும் பறை
- தலைப்பறை: யானை முதலியவற்றின் முன்னே கொட்டும் பறை
- படலை: வாய் அகன்ற பறை
- பண்டாரமேளம் : அரச விளம்பரம் குறித்த பறை
- பன்றிப்பறை: காட்டுப்பன்றிகளை விரட்ட அடிக்கும் பறை

என்று பறை பலவிதங்களிலும், பல பயன்களுக்காகவும் அடிக்கப்படுகின்றன.

தற்காலத்தில் தலித் மக்களின் பண்பாட்டு அடையாளமாகவும், சமூக விடுதலையின் அடையாளமாகவும் பல குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. கோயில் சார்ந்த நிகழ்ச்சிகளிலும், வாழ்க்கை வட்ட சடங்குகளிலும், அரசியல் பிரச்சாரங்களிலும் நிகழ்த்தப்படுகின்றன.

**தமுக்கு எனும் சிறுபறை:**

இதனை மண், மரம், உலோகம் ஆகியவற்றால் செய்யப்பட்டிருக்கக் காணலாம். முரசுக்கட்டை, இடுகட்டி சட்டி, பறை என்றெல்லாம் இதனைக் கூறலாம்.

கண்டு நுப்பது கயிறு நுப்பது
கயிறு கட்டுற தும்பு நுப்பது
எல்லாம் நுப்பது எருது நுப்பது
எருது கட்டுற தும்பு நுப்புது

என்ற வாய்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தமுக்கு வாசிக்கக் கற்றுக் கொடுக்கிறார்கள். பறையர் எனும் சாதியினர் முன்பு இதனை வாசித்தார்கள். அறிவிப்புச் செய்யும் கருவியாக பறை முன்னர் பயன்படுத்தப்பட்டது. இரப்பர்வார், தொல்வார், புளியமரக்குச்சி மூலம் இதனை இயக்குவார்கள். பேரிகை மன்னர் காலத்தில் தகவல் தெரிவிக்கப் பயன்பட்ட இசைக்கருவி.

ஆகுளி என்பதும் சிறுபறை வகையைச் சார்ந்தது. இந்த தாளவிசைக் கருவி முழவுக்குஇணையாகவும் துணையாகவும் பயன்படுத்தப்படுகிறது.

**தம்பட்டம்:**

கிராம தேவதைகளின் திருவிழாக்களில் பயன்படுத்தக் கூடிய நாட்டுப்புற இசைக் கருவிகளில் ஒன்று. இதன் ஒருபக்கம் தோலால் முடப்பட்டிருக்கும். டண்டண் என்று கேட்கும்படி இருக்கும்.

**கொம்பு :**

வெல்படைத் தறுகண்வெஞ்சொல் வேட்டுவர் கூட்டம்தோறும்
சில்லரித் துடியும் கொம்பும் சிறுகண் ஆகுளியும் கூடி
கல் எனும் ஒலியின் மேலும் கறங்கிசை அருவி எங்கும்

என்று தேவாரம் இசைக் கருவிகளைப் பற்றிப் பட்டியலிடுகிறது.

அதில் கொம்பு எனப்படுவது ஒரு தூம்பு வகை இசைக்கருவியாகும். ஊது கருவி. நாட்டுப்புற இசையிலும் திருவிழாக் காலங்களில் கோவிலிலும் பயன்படுகிறது. பண்டைய காலத்தில் விலங்குகளின் கொம்புகளைப் பயன்படுத்தினார்கள் பின்னர் மூங்கிலாலும், அதன் பின்னா ;உலோகத்தாலும் பயன்படுத்தினார்கள்.

**தாளம் :**

தாளம் எனப்படுவது ஒரு கஞ்ச வகை இசைக்கருவி. இதற்கு சிங்கி, மணி, ஜாலர் எனப்பல பெயர்கள் உண்டு. கைக்கு அடக்கமான உலோகத்தாலான இரு பாகங்களைக் கொண்டது. இரண்டையும் சேர்த்துத் தட்டினால் கணீர் என்று ஓசை எழுப்பும். பல்வேறு இசைக்கருவிகள் வாசிக்கப்படும் போது இசையின் காலஅளவுகளை நெறிப்படுத்த இக்கருவி பயன்படுகிறது. அதனால் ஜல்ரா தட்டதோ, பின்பாட்டுப் பாடாதே என்ற பழமொழிகள் தோன்றின.

சேகண்டி அல்லது சேமக்கலம்:

சவுண்டி, செகண்டை, செயகண்டி, செயகண்டிகை என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. வெண்கலத்தால் வட்ட வடிவமாக உருவாகப்படும். வெண் சங்கொலியுடன், சேமகலத்தைக் கனத்த தேக்குக் குச்சியால் அடித்து ஒலி எழுப்புவார்கள். தற்போது மனித இறப்பின் போது அவ்வொலி எமுப்பப்படுகிறது.

**எக்காளம்:**

சமயச்சடங்குகளில் பயன்படுத்தப்படும் நாட்டுப்புற இசைக்கருவிகளில் ஒன்றாகும். இது நான்கு பித்தளை அல்லது தாமிரக் குழாய்கள் சேர்ந்து வாய் வைத்து ஊதும் துளையுடன் கூடிய இசைக்கருவியாகும.; வெற்றியின் அடையாளமாக ஊதுவது. சிறுதெய்வ வழிபாட்டில்; சாமியாடுதல் அல்லது அருள் ஏறுதல் நிகழ்வில் உடுக்கை மற்றும் எக்காள இசையின் பங்கு மிக முக்கியமானது.

**கஞ்சிரா:**

சமயச்சடங்குகளில் பயன்படுத்தப்படும் நாட்டுப்புற இசைக்கருவி. உடும்புத் தோலால் செய்யப்படும் இசைக்கருவி. தாடப்பலகை, கனகதப்பட்டை, டேப் தாஸ்ரிதப்பட்டை முதலியனவும் கஞ்சிரா வகையைச் சாரும்.

**உறுமி மேளம்:**

ஒரு தாள தோற்கருவி. உறுமி மேளம் இரண்டு முகங்கள் உடைய இடை சுருங்கிய ஒரு தோற் கருவி. இது ஆட்டின் தோலினால் செய்யப்டுகின்றது. இந்த மேளத்தின் முகத்தைக் குச்சியால் உரசி உராய்ந்து ஒரு விலங்கு உறுமுவது போல இசையெழுப்புவார்கள். மாரியம்மன், அய்யனார், கறுப்புசாமி போன்ற சிறுதெய்வங்களின் திருவிழாக்களில் இசைக்கப்படும்.

பாமர மக்களிடைய ஒவ்வொரு நாள் வாழ்வும் இசையோடு பின்னிப்பிணைந்து இசைக் கருவிகள் ஊடுருவி அவர்களையும் இசையினையும் பிரிக்க முடியாதபடி அவர்களுடைய பிறப்பு முதல் இறப்பு வரை இசைக்கருவிகள் பயன்பட்டது. ஆனால் அவை தகவல் தொடர்பு சாதனங்களாலும், நாகரீக மாற்றத்தாலும் அழிந்து போகக்கூடிய நிலையிலுள்ளன. இன்றைய இளைய சமுதாயம் அவற்றை மீண்டு நம் பண்பாட்டையும், கலாசாரத்தையும் காக்க உறுதி எடுக்கவேண்டும்!

**துணைநூற்பட்டியல்**

1. தொல்காப்பியம் - கழக வெளியீடு -1995
2. நாட்டுப்புற இலக்கியங்கள் - சு.சண்முகசுந்தரம் - சென்னை 1982
3. நாட்டுப்புறக் கலைகள் - ஏ.என். பெருமாள்
4. நாட்டுப்புறவியல் - சு.சக்திவேல் சென்னை – 1983
5. நாட்டுப்புறப்பாடலும் பண்பாடும் - வே.அழகரசன்